Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (Oct 2026), pp. 267–275
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# புறநானூற்றில் பண்பாட்டு நெறிகள்

பவுன் துரைச்சி பெ[1,*], முனைவர். ரவி ஜேசுராஜ் சு[2]

[1] பதிவு எண் :241112801005, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி., *India*

[2] உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: பவுன் துரைச்சி பெ — pounanusma@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | 4 October 2026 | 1 October 2026 |

| DOI | Article ID / கட்டுரை எண் |
|---|---|
| — | TAJP-2026-00049 |

## Abstract / ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமூக அமைப்பையும், பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்து கொள்வதற்கான முதன்மையான இலக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. அவற்றுள் புறநானூறு தமிழரின் புறவாழ்வை விரிவாகப் பதிவு செய்துள்ள குறிப்பிடத்தக்க நூலாகும். அரசியல், போர், வீரம், கொடை, விருந்தோம்பல், நட்பு, உறவு, உணவு, உடை, அணிகலன், கலை, இசை, புலவர் மரபு, சமூக உறவுகள், பெண்களின் பங்களிப்பு, ஈகை, மானம், புகழ் போன்ற பல்வேறு கூறுகள் புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெறுகின்றன. எனவே, புறநானூறு ஒரு இலக்கியப் படைப்பாக மட்டுமன்றி, பழந்தமிழரின் பண்பாட்டு வாழ்க்கையை அறிய உதவும் சமூக வரலாற்று ஆவணமாகவும் விளங்குகிறது.
புறநானூற்றில் வெளிப்படும் விருந்தோம்பல், ஈகை, உணவுப் பண்பாடு, உடை மற்றும் அணிகலன், கலை மற்றும் இசை, புலவர் பண்பாடு, வீரப் பண்பாடு, பெண்களின் பண்பாட்டு நிலை, நட்பு மற்றும் உறவுமுறை, சமூக ஒற்றுமை, மனிதநேயம், இயற்கையோடு இணைந்த வாழ்க்கை ஆகிய பண்பாட்டுக் கூறுகளை அறிந்து கொள்ள முடிகின்றது. இவற்றின் வழியாகப் பழந்தமிழர் வாழ்வியலில் நிலவிய பண்பாட்டு நெறிகள் எவ்வாறு சமூக ஒழுங்கையும் மனித உறவுகளையும் பேணின என்பதும் விளக்கப்படுகிறது.

**Keywords / திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம்; பண்பாடு; சமூக அமைப்பு; வாழ்வியல்; இயற்கை

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** பெ, ப. து., & சு, மு. ர. ஜே. (2026). புறநானூற்றில் பண்பாட்டு நெறிகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01). https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8726

## முன்னுரை :

ஒரு சமூகத்தின் அடையாளத்தை வெளிப்படுத்துவதில் அதன் பண்பாட்டிற்கு முக்கியப் பங்கு உண்டு. ஒரு மக்களின் உணவு, உடை, இருப்பிடம், தொழில், கலை,

வழிபாடு, விழா, விருந்தோம்பல், உறவுமுறை, சமூக ஒழுக்கம், வீர உணர்வு, ஈகை, அன்பு போன்ற அனைத்தும் அச்சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளாக அமைகின்றன. பண்டைத் தமிழரின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு சங்க இலக்கியங்கள் சிறந்த ஆதாரங்களாக அமைகின்றன. குறிப்பாக, அகம் தனிமனித உணர்வுகளையும், புறம் சமூக வாழ்க்கை, அரசியல், போர், கொடை, புகழ் போன்ற புறவாழ்வியல் கூறுகளையும் எடுத்துரைக்கின்றன. இவ்வகையில் புறநானூறு பழந்தமிழரின் சமூக வாழ்க்கையைப் பல கோணங்களில் பதிவு செய்துள்ளது. புறநானூற்றில் மன்னர்களின் வாழ்க்கை மட்டுமல்லாமல், புலவர்கள், வீரர்கள், பெண்கள், வாணிகர்கள், உழவர்கள், பாணர்கள், பொதுமக்கள் போன்ற பல்வேறு சமூகத்தினரின் வாழ்க்கைச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. இதனால் அந்நூல் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் பண்பாட்டை மட்டும் பதிவு செய்யாமல், சங்ககாலச் சமூகத்தின் பல அடுக்குகளையும் அறிந்து கொள்ள வழிவகுக்கிறது.

**பண்பாடு – பொருள் விளக்கம் :**

'பண்பாடு' என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறையைக் குறிக்கும் பரந்த கருத்தாகும். உணவு, உடை, இருப்பிடம் போன்ற பொருட்சார் கூறுகள் மட்டுமின்றி, நம்பிக்கைகள், வழக்கங்கள், சடங்குகள், கலைகள், மொழி, உறவுமுறைகள், ஒழுக்கநெறிகள், சமூகப் பொறுப்புணர்வு போன்ற கருத்துசார் கூறுகளும் பண்பாட்டுக்குள் அடங்குகின்றன. பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் வாழ்க்கை நெறியாகவும் அமைகிறது. ஒரு தலைமுறை உருவாக்கிய வாழ்வியல் அனுபவங்கள் அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் பண்பாட்டு மரபுகளாக மாறுகின்றன. புறநானூற்றைப் பொறுத்தவரையில் பண்பாடு என்பது தனிமனித வாழ்க்கையோடு மட்டும் தொடர்புடையதல்ல. மன்னன்–மக்கள் உறவு, புலவர்–மன்னர் உறவு, விருந்தினர்–விருந்தோம்புநர் உறவு, வீரர்–சமூகம் உறவு, குடும்பம்–சமூகம் உறவு போன்ற பல்வேறு உறவுகளின் வழியாகப் பண்பாடு வெளிப்படுகிறது.

**விருந்தோம்பல் பண்பாடு:**

பழந்தமிழரின் பண்பாட்டில் விருந்தோம்பல் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. விருந்தினரை வரவேற்று, அவர்களுக்கு உணவு அளித்து, அவர்களைப் பேணி அனுப்புவது சமூகக் கடமையாகக் கருதப்பட்டது. சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல் ஒரு வாழ்வியல் நெறியாகத் தொடர்ந்து வெளிப்படுகிறது. ஆய்வுகளும் விருந்தோம்பலை சங்ககாலத் தமிழரின் முக்கிய பண்பாட்டு நெறிகளில் ஒன்றாக அடையாளப்படுத்துகின்றன. புறநானூற்றில் வள்ளல்களின் பெருந்தன்மை, புலவர்களுக்குச் செய்யப்பட்ட வரவேற்பு, பாணர்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவு மற்றும் பரிசில் போன்றவற்றின் வழியாக விருந்தோம்பல் வெளிப்படுகிறது. விருந்தினருக்கு உணவு அளிப்பது வெறும் பசியைப் போக்கும் செயல் அல்ல. அது அன்பு, மரியாதை, பகிர்வு, சமூக உறவு ஆகியவற்றின் வெளிப்பாடாக அமைந்தது. தனக்குக் கிடைத்த வளத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது தமிழரின் உயர்ந்த பண்பாகக் கருதப்பட்டது. இதனைப்,

> **"நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**
> **இரும்புடைப் பழவாள் வைத்தன னின்றித்"[1] (புறம்-316.5-6)**

என்ற பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகின்றது. சங்ககாலத் தமிழரின் பண்பாட்டு நெறிகளுள் விருந்தோம்பல் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தது.

விருந்தோம்பலின் சிறப்பை நேரடியாகப் பதிவு செய்யும் இலக்கியச் சான்றாக அமைகிறது. மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் பாடிய இப்பாடலில், விருந்தினரை உபசரிப்பதற்காகத் தலைவன் தன்னிடம் இருந்த பொருளையே பணயம் வைக்கும் செய்தி இடம்பெறுகிறது. இதனால் புறநானூற்றில் காணப்படும் விருந்தோம்பல், தனிமனித ஒழுக்கமாக மட்டுமல்லாமல், சமூகத்தை ஒன்றிணைக்கும் பண்பாட்டு நெறியாகவும் கருதப்படலாம்.

**ஈகை மற்றும் கொடைப் பண்பாடு:**

புறநானூற்றின் மிக முக்கியமான பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று ஈகை ஆகும். சங்ககால மன்னர்கள் மற்றும் வள்ளல்கள் தமக்குக் கிடைத்த செல்வத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதில் பெருமை கொண்டிருந்தனர். பாரி, பேகன், காரி, ஓரி, ஆய், அதியமான் போன்ற வள்ளல்கள் ஈகைச் சிறப்பால் புறநானூற்றில் நினைவுகூறப்படுகின்றனர். வள்ளல்களின் கொடை என்பது பொருளைக் கொடுப்பது மட்டுமல்ல. இரவலரின் தேவையை உணர்ந்து உதவுதல் என்ற மனிதநேயப் பண்பையும் அது வெளிப்படுத்துகிறது.

**“சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி**

**விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர**

**ஆடினிர் பாடினிர் செலினே**

**நாடுங் குன்று மொருங்கீ யும்மே.”[2] (புறம்.109-15-18)**

இவ்வரிகளில் கபிலர், பாரியின் ஈகை என்பது பொருளைக் கொடுப்பதைக் கடந்த, தன்னிடம் உள்ள மிகப் பெரிய வளத்தையே பிறருக்குத் தந்து மகிழும் மனப்பான்மை என்பதை வெளிப்படுத்துகிறார். யாழ் இசைத்தும் பாடியும் வரும் பரிசிலர்களுக்கு, அவர்களின் கலைத்திறனுக்கு உரிய பரிசாகச் சிறிய பொருளை மட்டும் வழங்காமல், “நாடும் குன்றும்” வழங்கக்கூடிய அளவிற்கு பாரியின் கொடை மனம் விரிந்திருந்ததாகப் பாடல் சுட்டுகிறது.

புலவர்கள் மன்னர்களின் கொடையைப் பாடுவதோடு, கொடை இல்லாத அரசர்களை அறிவுறுத்தியும் உள்ளனர். இதன் மூலம் செல்வம் தனிமனிதனிடம் குவிந்து கிடப்பதற்காக அல்ல, சமூகத்தில் பகிர்ந்து பயன்படுத்தப்படுவதற்கானது என்ற கருத்து வெளிப்படுகிறது. எனவே, புறநானூற்றில் ஈகை என்பது செல்வப் பகிர்வு, பசியாற்றுதல், புலவர் பாதுகாப்பு, இரவலருக்கு உதவுதல், சமூகப் பொறுப்புணர்வு, புகழைப் பெறுதல் என்ற பல நிலைகளில் வெளிப்படுகிறது.

**உணவுப் பண்பாடு:**

ஒரு சமூகத்தின் பண்பாட்டை அறிய அதன் உணவுப் பழக்கங்களை அறிதல் முக்கியமானதாகும். புறநானூற்றில் உணவு தொடர்பான பல்வேறு செய்திகள் இடம்பெறுகின்றன. சங்ககால உணவுப் பண்பாடு என்பது உணவு வெறும் பசியைப் போக்கும் பொருளாக மட்டுமின்றி, விருந்தோம்பல், சமூக உறவு, வாழ்வியல் அடையாளம் ஆகியவற்றோடும் தொடர்புடையதாக இருந்ததைச் சுட்டுகின்றன. புறநானூற்றில் சோறு, கள், இறைச்சி, மீன், பால், அடிசில் போன்ற உணவுப் பொருட்கள் தொடர்பான குறிப்புகள் காணப்படுகின்றன. நிலப்பரப்பு, தொழில், வாழ்வியல் சூழல் ஆகியவற்றிற்கு ஏற்ப உணவுப் பழக்கங்களில் வேறுபாடுகள் இருந்தன. உழவர்கள் உற்பத்தி செய்த நெல் உணவின் அடிப்படையாக அமைந்தது. கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் உணவில் மீன் முக்கியத்துவம் பெற்றிருந்தது. வேட்டையாடுதல் சார்ந்த சமூகங்களில் வேட்டையாடப்பட்ட

விலங்குகளின் இறைச்சியும் உணவாகப் பயன்படுத்தப்பட்டது. உணவின் தன்மை மட்டுமன்றி, உணவைப் பகிர்ந்து உண்ணுதல் என்ற பண்பும் முக்கியமானது. விருந்தினருடன் உணவைப் பகிர்ந்து கொள்வது சமூக அன்பின் வெளிப்பாடாக அமைந்தது.

**“உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்**

**அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்**

**தமிய ருண்டலு மிலரே முனிவிலர்”[3] (புறம்-182-1-3)**

இவ்வரிகளின் மூலம் உணவுப் பண்பாட்டின் வழியாக தமிழரின் பகிர்வுணர்வையும் பிறர்நலச் சிந்தனையையும் வெளிப்படுத்துகிறது. உணவு தனிமனித இன்பத்திற்கான பொருளாகக் கருதப்படாமல், பிறருடன் பகிர்ந்து உண்ண வேண்டிய சமூகக் கடமையாகக் கருதப்பட்டமை இப்பாடலின் வழி புலப்படுகிறது. குறிப்பாக, அமிழ்தமே கிடைத்தாலும் தனித்து உண்ணாத உயரிய பண்பு சுட்டப்படுவது, உணவுப் பகிர்வு தமிழரின் பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றாக நிலைபெற்றிருந்ததற்கான இலக்கியச் சான்றாக அமைகிறது. எனவே, இப்பாடல் உணவுப் பண்பாட்டை மட்டுமன்றி, அதன் அடிப்படையில் அமைந்த ஈகை, விருந்தோம்பல், பகிர்வு, பிறர்நலம் பேணுதல் ஆகிய பண்பாட்டு நெறிகளையும் ஒருங்கிணைத்துக் காட்டுகிறது. இதனால் புறநானூற்றில் உணவுப் பண்பாடு என்பது பொருளாதார வாழ்க்கை, தொழில், நிலப்பரப்பு, விருந்தோம்பல் ஆகிய அனைத்துடனும் தொடர்புடையதாகத் தோன்றுகிறது.

**உடை மற்றும் அணிகலன் பண்பாடு:**

உடை என்பது மனிதனின் அடிப்படைத் தேவையாக மட்டுமல்லாமல், சமூக அடையாளத்தையும் வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறாகும். புறநானூற்றுப் பாடல்களில் மன்னர்கள், வீரர்கள், பெண்கள், பாணர்கள் போன்றோரின் உடை மற்றும் அணிகலன் தொடர்பான செய்திகள் இடையிடையே இடம்பெறுகின்றன. மன்னர்கள் தங்களது அரசச் சிறப்பை வெளிப்படுத்தும் அணிகலன்களையும் ஆடைகளையும் அணிந்திருந்தனர். வீரர்களின் அணிகலன்கள் அவர்களின் வீரத்தையும் போர்த் தன்மையையும் வெளிப்படுத்துகின்றன. பெண்களின் அணிகலன்களாக, வளையல், சிலம்பு, தொடி அணிகலன்கள், மலர் அணிதல் போன்றவை குறிப்பிடப்படுகின்றன. அணிகலன்கள் அழகுக்காக மட்டுமின்றி, சமூக நிலை, செல்வம், திருமணநிலை, விழாக்காலம் போன்றவற்றையும் வெளிப்படுத்தியிருக்கலாம். இதன் மூலம் புறநானூற்றில் உடையும் அணிகலனும் அக்கால மக்களின் அழகியல் உணர்வையும் சமூகப் பண்பாட்டையும் அறிய உதவுகின்றன.

**“அடிபுனை தொடுகழன் மையணற் காளைக்கென்**

**தொடிகழித் திடுதல்யான் யாயஞ் சுவலே**

**அடுதோண் முயங்க லவைநா ணுவலே**

**என்போற் பெருவிதுப் புறுக வென்றும்**

**ஒருபாற் படாஅ தாகி/**

**இருபாற் பட்டவிம் மைய லூரே.”[4] (புறம்-83,1-6)**

என்ற வரிகளின் மூலம் சங்ககால அணிகலன் பண்பாட்டிற்குச் சிறந்த சான்றாக அமைகிறது. “அடிபுனை தொடுகழல்” எனும் தொடரால் வீரர்கள் காலில்

வீரக்கழல் அணிந்திருந்தமையும், “தொடிகழித் திடுதல்” எனும் குறிப்பால் பெண்கள் கையில் தொடி எனும் வளையலை அணிந்திருந்தமையும் அறியப்படுகிறது. மேலும், பெண்ணின் மனநிலை மாற்றத்தால் தொடி கழன்று நெகிழ்வதாகக் கூறப்படுவது, அணிகலன் பெண்களின் உடல் அழகோடு மட்டுமன்றி அவர்களின் உணர்வுநிலையையும் வெளிப்படுத்திய பண்பாட்டுக் குறியீடாக விளங்கியதைப் புலப்படுத்துகிறது. எனவே, இப்பாடல் சங்ககாலத்தில் ஆடவர் வீரக்கழலும், மகளிர் தொடியும் அணிகலன் பண்பாட்டில் முக்கிய இடம் பெற்றிருந்ததை உறுதிப்படுத்துகிறது.

**கலை மற்றும் இசைப் பண்பாடு:**

சங்ககாலத் தமிழரின் பண்பாட்டில் கலைகள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. குறிப்பாக பாணர், கூத்தர், விறலியர் போன்ற கலைஞர்கள் சமூகத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்தனர். புறநானூற்றில் பாணர்களின் வாழ்க்கை, அவர்கள் இசைக்கருவிகளுடன் மன்னர்களை நாடிச் செல்வது, மன்னர்களைப் பாடிப் பரிசில் பெறுவது போன்ற செய்திகள் காணப்படுகின்றன. யாழ், முரசு போன்ற இசைக்கருவிகள் பண்பாட்டு வாழ்க்கையோடும் அரசியல் வாழ்க்கையோடும் தொடர்புடையன. முரசு போரின் அடையாளமாகவும், அரச அதிகாரத்தின் அடையாளமாகவும் விளங்கியது. யாழ் போன்ற இசைக்கருவிகள் பாணர்களின் கலைவாழ்வை வெளிப்படுத்துகின்றன.

**“இளையோர் சூடார் வளையோர் கொய்யார்/**

**நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்/**

**பாணன் சூடான் பாடினி யணியாள்/**

**ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த/**

**வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை/**

**முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே”**[5]

**(புறம்-242-1-6)**

என்ற வரிகளின் மூலம் சங்ககாலத் தமிழரின் கலை மற்றும் இசைப்பண்பாட்டை வெளிப்படுத்தும் முக்கியமான இலக்கியச் சான்றாக அமைகிறது. ‘நல்லியாழ்’, ‘பாணன்’, ‘பாடினி’ ஆகிய குறிப்புகள் அக்காலத்தில் இசைக்கலைஞர்களும் நிகழ்த்துக் கலைஞர்களும் சமூக வாழ்வில் இடம்பெற்றிருந்தமையை உணர்த்துகின்றன. குறிப்பாக பாணன் யாழை இசைக்காமலும், பாடினி தன்னை அலங்கரித்துக் கொள்ளாமலும் இருப்பதாகப் புலவர் குறிப்பிடுவது, கலைச் செயல்பாடுகள் சமூகத்தின் உணர்வுநிலையோடு நெருங்கிய தொடர்புடையவையாக இருந்ததை வெளிப்படுத்துகிறது. ஒரு வீரனின் மறைவால் இசையும் கலைநிகழ்வுகளும் முடங்கிப்போவதாகக் காட்டப்படுவது, கலைஞர்கள் சமூக வாழ்வின் இயல்பான அங்கங்களாக விளங்கியதற்கான சான்றாகும். எனவே, இப்பாடல் சங்ககாலத் தமிழரின் இசையுணர்வு, கலைஞர்களுக்குக் கிடைத்த சமூக இடம், யாழின் பயன்பாடு, பாணர்–பாடினியரின் கலைப்பணி ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கான குறிப்பிடத்தக்க இலக்கியச் சான்றாகத் திகழ்கிறது. புலவர்கள் பாடல்கள் மூலம் மன்னர்களின் புகழையும், மக்களின் வாழ்க்கையையும், சமூகத்தின் நெறிகளையும் பதிவு செய்தனர். எனவே, கலை என்பது சங்ககாலத்தில் வெறும் பொழுதுபோக்காக இருந்ததில்லை. அது சமூக நினைவகமாகவும், வரலாற்றுப் பதிவாகவும், அரசியல் அறிவுறுத்தலுக்கான

கருவியாகவும் விளங்கியது.

**புலவர் பண்பாடு:**

புறநானூற்றின் தனிச்சிறப்புகளில் ஒன்று அதன் புலவர் மரபு ஆகும். புலவர்கள் மன்னர்களைப் புகழ்ந்து பாடியவர்களாக மட்டுமே கருதப்படக் கூடாது. அவர்கள் அரசர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர்; தவறான செயல்களைச் சுட்டிக்காட்டியுள்ளனர்; மக்களின் நலனுக்காக மன்னர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதனால் புலவர் சமூகத்தில் அறிவின் குரலாகவும், சமூகப் பொறுப்புணர்வுடையவர்களாகவும் செயல்பட்டுள்ளனர். புறநானூற்றுப் பாடல்கள் காட்டும் புலவர் பண்பாடு குறித்து தனி ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை புலவர்கள், பாணர்கள், ஔவையார், பிசிராந்தையார் போன்றோரின் வாழ்க்கை மற்றும் சமூகப் பங்களிப்பை எடுத்துக்காட்டுகின்றன. புலவர்–மன்னர் உறவு என்பது பொருள் பெறும் உறவு மட்டுமல்ல. அது அறிவு–அதிகாரம் இடையேயான உரையாடலாகவும் அமைந்தது.

**“நாடெனப் படுவது நினதே யத்தை, ஆங்க**

**நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே**

**நினவ கூறுவ லெனவ கேண்மதி**

**அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து”[6] (புறம்-35,11-14)**

என்ற பாடல் வரிகளின் மூலம் வெள்ளைக்குடி நாகனார், கிள்ளிவளவனுக்கு அரசனின் கடமையையும் குடிமக்களின் நலனையும் எடுத்துரைக்கிறார். புலவர் அரசனைப் புகழ்பவராக மட்டும் இல்லாமல், அவனுக்கு அரசியல் நெறி கூறும் அறிவுசார் சமூகப் பொறுப்பாளராக விளங்கியமை புலப்படுகிறது.

**வீரப் பண்பாடு:**

புறநானூற்றில் வீர வாழ்க்கை மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. போரில் உயிர் துறத்தல், நாட்டைப் பாதுகாத்தல், மானத்தைக் காத்தல், புகழுடன் வாழ்தல் போன்றவை வீரப் பண்பாட்டின் கூறுகளாகக் காட்டப்படுகின்றன. வீரர்களின் போர்த்திறன் மட்டுமன்றி, அவர்களை உருவாக்கிய குடும்பமும் சமூகமும் புறநானூற்றில் கவனிக்கப்படுகின்றன. தாய்மார்கள் தமது மகனின் வீரத்தைப் பெருமையாகக் கருதும் செய்திகள் காணப்படுகின்றன. போரில் இறந்த வீரரின் புகழ் சமூக நினைவில் நிலைத்திருக்க வேண்டும் என்ற எண்ணமும் வெளிப்படுகிறது. நடுகல் வழிபாடு போன்ற மரபுகளும் வீரர்களின் சமூக நினைவோடு தொடர்புடையவை. வீரமரணம் என்பது தனிமனித மரணம் மட்டுமல்ல, சமூகத்திற்காகச் செய்த தியாகமாகப் புரிந்துகொள்ளப்பட்டது. புறநானூற்றில் வீரமும் பண்பாடும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதை நவீன ஆய்வுகளும் சுட்டுகின்றன.

**“ஈன்றுபுறந் தருத லென்றலைக் கடனே**

**சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே**

**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**

**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**

**ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்**

**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.”[7] (புறம்-312,1-6)**

இப்பாடல் ஒரு வீரனை உருவாக்குவதில் தாய், தந்தை, கொல்லன், அரசன் ஆகியோருக்குரிய கடமைகளை வரையறுக்கிறது. தாய் மகனைப் பெற்றுப் புறந்தருதல், தந்தை அவனைச் சான்றோனாக வளர்த்தல், கொல்லன் போர்க்குரிய வேலை உருவாக்கித் தருதல், வேந்தன் வீரனுக்கு நல்ல பயிற்சி மற்றும் ஒழுக்கத்தை வழங்குதல் எனக் கடமைகள் பகுக்கப்படுகின்றன. இதனால் வீரம் என்பது தனிமனிதப் பண்பு மட்டுமன்று; குடும்பம், தொழில்சார் சமூகத்தினர், அரசமைப்பு ஆகிய அனைத்தும் இணைந்து உருவாக்கிய சமூகப் பண்பாடு என்பதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

**பெண்களின் பண்பாட்டு நிலை:**

புறநானூற்றில் பெண்கள் குடும்ப வாழ்க்கையில் மட்டுப்படுத்தப்பட்டவர்களாக மட்டுமே காட்டப்படவில்லை. அவர்கள் சமூக, அரசியல், வீர மற்றும் அறிவியல்–பண்பாட்டு வெளிகளிலும் பங்கேற்றுள்ளனர். ஔவையார் போன்ற பெண்பாற் புலவர்கள் அரசர்களோடு உரையாடியுள்ளனர். மன்னர்களுக்கு அறிவுரை கூறியுள்ளனர். இதன் மூலம் பெண் அறிவாளிகளின் சமூகப் பங்களிப்பை அறிய முடிகிறது. வீரர்களின் தாய்மார்கள், மனைவிகள் ஆகியோரும் புறநானூற்றில் முக்கியமான பாத்திரங்களாகத் தோன்றுகின்றனர். ஒரு வீரனின் மரணம் குடும்பத்தை மட்டுமல்ல, சமூகத்தையும் பாதிப்பதாகக் காட்டப்படுகிறது. அதே நேரத்தில், வீரத்தைப் பேணும் பண்பாட்டு மனப்பாங்கை பெண்களும் வெளிப்படுத்துகின்றனர்.

இதனால் புறநானூற்றில் பெண்கள்: குடும்பத்தின் பண்பாட்டுப் பாதுகாவலர்கள் வீரத்தை ஊக்குவிப்பவர்கள் புலவர்கள் அறிவுரையாளர்கள் சமூக உணர்வுடையவர்கள் என்ற பல்வேறு நிலைகளில் வெளிப்படுகின்றனர்.

**“கெடுக சிந்தை கடிதிவ டுணிவே**
**மூதின் மகளி ராத றகுமே**
**மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை**
**யானை யெறிந்து களத்தொழிந் தனனே**
**நெருந லுற்ற செருவிற் கிவள் கொழுநன்**
**பெருநிரை விலங்கி யாண்டுப்பட் டனனே**
**இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்**
**பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி**
**ஒருமக னல்ல தில்லோள்**
**செருமுக நோக்கிச் செல்கென விடுமே.”[8] (புறம்- 279,1-11)**

இப்பாடலில் தந்தையும் கணவனும் போரில் இறந்த நிலையிலும், தன் ஒரே மகனுக்குப் போர்க்கருவியைக் கொடுத்து “செருமுக நோக்கிச் செல்க” என அனுப்பும் தாய் காட்டப்படுகிறாள். இதன் மூலம் பெண் வீரத்தைப் பேணும் பண்பாட்டின் ஒரு செயல்பாட்டாளராகவும், வீர மரபை அடுத்த தலைமுறைக்குக் கடத்துபவராகவும் இருந்தமை புலப்படுகிறது.

**புறநானூற்றின் பண்பாட்டு முக்கியத்துவம்:**

புறநானூற்றைப் பண்பாட்டியல் நோக்கில் அணுகும்போது அது வெறும் மன்னர்களையும் போர்களையும் பதிவு செய்யும் நூல் என்ற வரையறையைத் தாண்டிச் செல்கிறது. அந்நூலில்: அரசியல் + பொருளாதாரம் + சமூகம் + குடும்பம் + கலை + உணவு + உடை + நம்பிக்கை + வீர உணர்வு + மனிதநேயம் என்ற பல்வேறு கூறுகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. எனவே, புறநானூறு ஒரு பண்பாட்டு ஆவணம் என்ற நிலையில் ஆராயத்தக்கது. மேலும், சமகால ஆய்வுகளும் புறநானூறு பழந்தமிழரின் சமூக வாழ்க்கையின் பல கூறுகளைப் பதிவு செய்துள்ளதாகக் குறிப்பிடுகின்றன.

## முடிவுரை:

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பண்பாட்டுக் கூறுகளை ஆய்வுக்கு உட்படுத்தியதன் வழியாக, சங்ககாலத் தமிழரின் வாழ்க்கை பல்வேறு பண்பாட்டு நெறிகளால் கட்டமைக்கப்பட்டிருந்தமை புலனாகிறது. அவர்களின் பண்பாடு வெறும் கலை, உணவு, உடை போன்ற புறத்தோற்றக் கூறுகளைக் கொண்டதாக அமையாமல், அன்பு, ஈகை, விருந்தோம்பல், நட்பு, மானம், வீரம், புகழ், மனிதநேயம், சமூகப் பொறுப்பு போன்ற உயர்ந்த வாழ்வியல் விழுமியங்களையும் உள்ளடக்கியதாக விளங்கியது. புறநானூற்றில் காணப்படும் விருந்தோம்பல், தனிமனித அன்பை சமூகப் பண்பாக மாற்றுகிறது. ஈகை, தனக்குரிய பொருளைத் தன்னலமின்றிப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் பண்பை வெளிப்படுத்துகிறது. உணவுப் பண்பாடு, நிலம் மற்றும் தொழிலோடு இணைந்த வாழ்க்கை முறையைப் புலப்படுத்துகிறது. உடை மற்றும் அணிகலன்கள் அழகியல் உணர்வையும் சமூக அடையாளத்தையும் வெளிப்படுத்துகின்றன. இசை, யாழ், முரசு, பாணர் மரபு ஆகியவை சங்ககாலத் தமிழரின் கலை உணர்வையும் சமூக நினைவாற்றலையும் எடுத்துக்காட்டுகின்றன. புலவர்கள் அக்காலச் சமூகத்தில் வெறும் பாடலாசிரியர்களாக மட்டும் செயல்படவில்லை. அவர்கள் அறிவுரையாளர்கள், சமூகக் கண்காணிப்பாளர்கள், அரசியல் சிந்தனையாளர்கள், பண்பாட்டுப் பாதுகாவலர்கள் என்ற நிலைகளிலும் செயல்பட்டுள்ளனர். மன்னர்களுக்கும் மக்களுக்கும் இடையே நிலவ வேண்டிய பொறுப்புணர்வையும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். பெண்களின் பங்களிப்பும் புறநானூற்றின் பண்பாட்டு வெளியில் குறிப்பிடத்தக்கதாகும். பெண்பாற் புலவர்களின் அறிவாற்றலும், வீரர்களின் தாய்மார்களின் மனநிலையும், குடும்பம் மற்றும் சமூகத்தில் பெண்களின் பங்களிப்பும் பழந்தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு பரப்பை விரிவுபடுத்துகின்றன. மேலும், **“யாதும் ஊரே யாவரும் கேளிர் ”** என்ற உலகப்பார்வை, புறநானூற்றின் பண்பாட்டு சிந்தனை உள்ளூர் சமூக எல்லைகளைத் தாண்டி மனிதநேயத்தை நோக்கியிருந்ததற்குச் சிறந்த சான்றாக அமைகிறது. அதேபோன்று, இயற்கையோடு இணைந்த வாழ்க்கை, நிலம்–நீர்–மழை ஆகியவற்றின் முக்கியத்துவம், மனித வாழ்வுக்கும் இயற்கைக்கும் இடையிலான நெருக்கமான உறவை வெளிப்படுத்துகின்றன. எனவே, புறநானூற்றில் காணப்படும் பண்பாட்டு நெறிகளைத் தொகுத்து நோக்கும்போது, “தனிமனித நலன் – குடும்ப நலன் – சமூக நலன் – நாட்டுநலன்” என்ற தொடர்ச்சியான வாழ்வியல் அமைப்பு வெளிப்படுகிறது. ஒருவரின் உயர்வு அவரது செல்வத்தால் மட்டும் அளவிடப்படாமல், அவர் வெளிப்படுத்தும் ஈகை, மானம், நட்பு, வீரியம், விருந்தோம்பல், மனிதநேயம், சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் அடிப்படையிலும் மதிப்பிடப்பட்டது என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்துகின்றன. ஆக, புறநானூற்றில் இடம்பெறும் பண்பாட்டு நெறிகள் பழந்தமிழரின் வாழ்க்கை முறையை மட்டும் பதிவு செய்யவில்லை, சமூக ஒற்றுமை, மனித உறவு, பகிர்வு, பொறுப்பு, அறம், மானம்

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு பண்பாட்டு வாழ்வியலை வெளிப்படுத்துகின்றன. இவ்வகையில் புறநானூறு தமிழரின் வரலாற்றுப் பதிவாக மட்டுமன்றி, அவர்களின் பண்பாட்டு நினைவகம் மற்றும் வாழ்வியல் ஆவணம் என்ற சிறப்பையும் பெறுகிறது.

**அடிக்குறிப்புகள் :**

1.திரு. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை (உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும், பக்-227.

2. மேலது, பக்-243.

3. மேலது, பக்-396.

4. மேலது, பக்-203.

5. மேலது, பக்-92.

6. மேலது, பக்- 99.

7. மேலது, பக்-221

8. மேலது, பக்-157.

**துணைநூற்பட்டியல் :**

1. துரைச்சாமிப்பிள்ளை , சு.ஔவை (உ.ஆ) - புறநானூறு மூலமும் உரையும், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் லிட்., 522.டி.டி.கே.சாலை, ஆள்வார்பேட்டை,

சென்னை -18.

© 2026 பவுன் துரைச்சி பெ, முனைவர். ரவி ஜேசுராஜ் சு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..